


## 1. திருவருகைக் காலம் - சிறு விளக்கம்

திருவருகைக் காலம் என்பது ஆண்டவரின் வருகையை எதிர்நோக்கி, அதற்காக நம்மையே தயாரிக்கும் காலமாகும். இஸ்ரயேல் மக்கள் மெசியாவின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தனர். அதற்காகத் தங்களையே தயாரித்தனர். மீட்பராம் இயேசுவின் வருகையை எதிர்நோக்குகின்றோம். அவ்வாறே நாமும் திருவருகைக் காலத்தின்போது இவ்வாறு நாம் எதிர்நோக்குவது இரண்டு வகைப்படும்:

1. ஏற்கெனவே வரலாற்றில் நிகழ்ந்த இயேசுவின் எடுத்தலை மீண்டும் நினைவு கூர்வது. அவர் நம் உள்ளத்தில், இல்லத்தில், பங்கில், சமுதாயத்தில் பிறக்கவேண்டும் என்பதற்காக நம்மையே நாம் தயாரிப்பது.
2. திருவருகைக் காலம் என்பது கடந்த கால நிகழ்ச்சியை நினைவு கூர்வது மட்டுமல்லாது. எதிர்காலத்தில் இயேசு கிறிஸ்து மீண்டும் வருவார் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்துவது. எனவே, இத்திருவருகைக் காலத்தில் இயேசுவின் இரண்டாம் வருகைக்காக நம் உள்ளங்களைச் செம்மைப்படுத்துகிறோம்.

### நான்கு வாரங்களைக் கொண்டுள்ள திருவருகைக் காலம் இரு பகுதிகளாக அமைந்துள்ளது:

1. திருவருகைக் கால முதல் ஞாயிற்றுக்கிழமையிலிருந்து டிசம்பர் 16 ஆம் நாள் வரை உள்ள காலம். இந்நாட்களில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக ஆவலோடு எதிர் பார்த்திருக்கும்படி மக்களைத் தூண்ட வேண்டும்.
2. டிசம்பர் 17 ஆம் நாள் முதல் 24 ஆம் நாள்வரை உள்ள காலம் திருவருகைக் காலத்தின் இரண்டாம் பகுதியாகும். இந்நாட்களில் ஆண்டவரின் பிறப்பு விழாவைக் கொண்டாட மக்களைத் தயார் செய்யவேண்டும்.

## 2. திருவருகைக் காலத்திற்கான சில பரிந்துரைகள்

1. நாள்தோறும் திருப்பலியில் பங்கேற்க. இல்லத்தில் விவிலியத்தை வாசித்துச் செபிக்க மக்களைத் தூண்டலாம்.
2. அதிகாலையில் ஊரிலுள்ள முக்கியத் தெருக்களில் பஜன் பாடலாம்.
3. திருவருகைக் காலத்தின் நான்கு வாரங்களையும் குறிப்பதற்காக, 4 மெழுகுத்திரிகளை வீட்டிலோ, ஆலயத்திலோ அலங்கரித்து வைக்கலாம்.
முதல்வாரம் 1, இரண்டாம் வாரம் 2, மூன்றாம் வாரம் 3, நான்காம் வாரம் 4 என அவற்றை ஏற்றலாம்.
4. வேன், அல்லது லாரியில் குடில் அமைத்து, பங்கிலுள்ள பல கிராமங்களுக்குச் சென்று, கிறிஸ்து பிறப்புப் பாடல்கள் பாடிச் செய்திகள் வழங்கலாம்.

5. பிற கிறிஸ்துவ சபையினருடன் இணைந்து, இன்னிசை வழிபாடு (Carol Service), மற்றும் கிறிஸ்மஸ் நற்செய்திச் கூட்டங்கள் நடத்தலாம்.
6. திருவருகைக் காலத்தின்போது செலவுகளைக் குறைத்து, அதன்வழியாகச் சேமித்த பணத்தையும் பொருள்களையும்ஏழைகளுக்கு வழங்கத் தூண்டலாம்.
7. கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவிற்கு முன் நடைபெறும் நவநாட்களில் சிறப்பு இறைவாக்கு வழிபாடுகள் நடத்தலாம்.
8. கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவிற்கு முன் ஒப்புரவு வழிபாடு நடத்தி, ஒப்புரவு அருட்சாதனத்தில் மக்களைப் பங்குபெறச் செய்யலாம்.
9. இல்லங்களைச் சந்தித்து, ஆண்டவரின் வருகைக்காகத் தங்களைத் தயாரிக்கும்படி மக்களைத் தூண்டலாம்.
10. திருவருகைக் காலத்தின்போது சில இறைவார்த்தைகளை மக்கள் தியானிப்பதற்காகச் அச்சடித்து வழங்கலாம்.
11. கிறிஸ்மஸ் மரம் அமைத்து, எல்லாருக்கும் அன்பளிப்புகள் வழங்க ஆவன செய்யலாம்.
12. கிறிஸ்மஸ் தாத்தா வழியாகப் பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்யலாம்.
13. பங்கிலுள்ள நலிவுற்ற மக்களைச் சந்தித்து உதவிகள் செய்யலாம்.
14. சிறுவர்கள், இளைஞர்கள், முதியோர் போன்றோர்க்கு கிறிஸ்து பிறப்பு விழாவையொட்டி விவிலிய வினா விடைப் போட்டி, பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி. மாறுவேடப் போட்டி, மற்றும் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடத்திப் பரிசுகள் வழங்கலாம்.

## 3. திருவருகைக் கால விவிலிய வழிபாடு

### முதல் வாரம்

(முன் தயாரிப்பு : பீடத்தின் முன்னால் ஒரு மேசையை அலங்கரித்து அதன் நடுவே திருநூலை விரித்து வைத்தல். அதைச் சுற்றி நான்கு அகல் விளக்குகள் வைத்தல்)

**வேதியர்** : இயேசு கிறிஸ்துவில் அன்புக்குரியவர்களே, திருச்சபையின் திருவழிபாட்டுக் காலச் சக்கரத்தில் முதலாவதாக வருவது திருவருகைக் காலம். கிறிஸ்து பிறப்பு விழாவை நாம் தகுந்த முறையில் கொண்டாடவும், அதன் வழியாகக் கிறிஸ்துவின் இறுதி வருகைக்கு நம்மைத் தயாரிக்கவும் திருவருகைக் காலம் தூண்டுகிறது.

வார்த்தை மனுவுருவானார் என்பதன் அடையாளமாகப் பீடத்தின் முன் திருநூல் வைக்கப்பட்டுள்ளது. அதைச் சுற்றியுள்ள நான்கு விளக்குகளும் திருவருகைக் காலத்தில் வரும் நான்கு வாரங்களைக் குறிக்கின்றன. ஒவ்வொரு வாரமும் விளக்கு ஏற்றப்படும். இப்பொழுது நாம் முதல் வாரத்தில் இருப்பதால் முதல் விளக்கை ஏற்றுவோம். இவ்விளக்குகள் கிறிஸ்து பிறப்பு விழாவிற்கும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் நாம் படிப்படியாக நம்மைத் தயார் செய்கிறோம் என்பதைக் குறிக்கின்றன.

**(விளக்கு ஏற்றுதல்)**

**இறைவன் ஒளிமயமானவர்; நம் அகஇருளை அகற்றி, நமக்கு அருள் ஒளி தருபவர். அவர் நம் உள்ளங்களில் ஒளிர வேண்டுமென, ஒன்று சேர்ந்து பாடுவோம்.**

**பாடல்** : ஒளியாம் இறையே வாராய்
ஒளியாம் இறையே வாராய்
எளியோர் நெஞ்சம் தனிலே
ஒளியாம் இறையே வாராய்-2

**வேதியர்** : இஸ்ரயேல் மக்கள் மெசியாவின் வருகைக்காக காத்திருந்தனர். அவர் ஆவலுடன் எத்தகையவர், அவர் என்னென்ன பணிகளைச் செய்வார் என்பதை அறிய அவர்கள் ஆர்வம் கொண்டிருந்தனர். வரவிருக்கும் மெசியா, மக்களைத் துன்பத்தினின்று விடுவித்து, நீதியுடன் அரசாள்வார் என்று இறைவாக்கினர் எசாயா மக்களுக்கு விளக்குவதை இப்பொழுது கேட்போம்.

**வாசகம்** : எசாயா 11 :1-10

**பாடல்** : அரவணைக்கும் அன்பு தெய்வமே - இயேசுவே
உன் அடியெடுத்து நான் செல்லும் பாதைகள் எல்லாம் (2)
என்னைத் தொடர்ந்து அரவணைக்க வேண்டுமே

(அல்லது)

**திருப்பாடல்கள்** 72: 1-2, 7-8, 12-13.

**பல்லவி** : தம்மை நோக்கி மன்றாடும் ஏழைகளையும் எளியோரையும் அவர் விடுவிப்பார்.

**வேதியர்** : இஸ்ரயேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த வல்லமைமிகு இறைவன், பாவத்தில் இருந்தும் தீமைகளிலிருந்தும் மனித சமுதாயத்திற்கு விடுதலை அளிக்கத் தம் திருமகனை இவ்வுலகிற்கு அனுப்பினார். அவர் பிறந்து ஈராயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்று அவர் நம் உள்ளங்களில் பிறக்கவேண்டும். அதற்காக இத்திருவருகைக் காலத்தில் நம்மைத் தயாரிக்க வேண்டும். எப்படித் தயாரிப்பது என்பதை மத்தேயு எழுதிய நற்செய்தியில் வாசிக்கக் கேட்போம்.

**நற்செய்தி : மத்தேயு 3 :1-12**

**மறையுரை : (சுருக்கமாக)**

**நம்பிக்கையாளின் மன்றாட்டுகள்**

**வேதியர்** : தாழ்நிலையில் நிற்கும் தம் அடியவர்களைக் கடைகண் நோக்கும் ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

**பதில்** : வந்தருளும் ஆண்டவரே; விரைந்தே வந்தருளும்

(பாடவும்)

* கன்னி மரியாவிடமிருந்து பிறந்து பாவம் தவிர மற்ற அனைத்திலும் எங்களைப்போன்று வாழ்ந்த ஆண்டவரே ...

* தந்தை கடவுளின் திருவுளத்திற்குப் பணிந்து, எங்களைப் பாவத்திலிருந்து மீட்க மனுவுரு எடுத்த ஆண்டவரே ...
* உமது பிறப்பின் வழியாக உலகுக்குப் புதிய விடுதலை வாழ்வை அளிக்கின்ற ஆண்டவரே...
* அறியாமையின் இருளில் சிக்கித் தவிப்பவருகளுக்கு உமது பேரொளியால் வழி காட்டிட...
* அன்பு, நீதி, உண்மை, பகிர்வு போன்ற இறையாட்சியின் மதிப்பீடுகளில் நாங்கள் வளர எங்களுக்கு ஆற்றலைத் தந்திட...
* நாங்கள் உமது பாதையை விட்டு விலகாமல் விழிப்போடு இருக்கவும், உம் கட்டளைகளைக் கருத்தூன்றிக் கடை பிடிக்கவும் உமது ஆவியின் வல்லமையைப் பொழிந்திட...
* நீர் ஒருவரே மீட்பர் என்பதை உலக மாந்தர் அனைவரும் அறிவதற்காக உமது பேரொளியால் அவர்களை நிரப்பிட...

**(அல்லது)**

**வேதியர்** : உம் அடியவர்களாகிய எம் உள்ளங்களில் எழுந்தருளி வாரும்.
**எல்:** ஆண்டவராகிய இயேசுவே வாரும்.

- கருணைக் கடலே வாரும்; எம் கலக்கத்தைப் போக்கிட வாரும்.
- இனிய இயேசுவே வாரும்; எங்களை இறையாட்சியின் மக்களாய் வாழச் செய்திட வாரும்;
- அன்பு இயேசுவே எங்களிடையே அன்புறவை வளர்க்க வாரும்.
- நல்ல இயேசுவே வாரும்; எங்களை நல்லவர்களாய் வாழச் செய்திட வாரும்.

**எல்** : பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே ...
**செபம்** : குழந்தை இயேசு நவநாள் செபத்தைச் சொல்லலாம்.
**பாடல்** : குழந்தை இயேசு வருவீரே
என் இதயக் குடிலில் எழுவீரே - 2 (2)
விண்ணில் வாழ்ந்த இறைமகனே
விண்ணவர் போற்றும் தூயவனே (2)
என்னில் நீவிர் வந்திடவே
இன்னிசையாலே அழைக்கின்றேன்

**இறுதி ஆசி** :
வேதியர் இறுதி ஆசிமொழிகளைக் கூறி வழிபாட்டை மூடிப்பார்.

---

2 ஆம், 3 ஆம், 4 ஆம் வாரங்களுக்காக வாசகங்கள்

2 ஆம் வாரம்
வாசகம் : எசாயா 40:3-5; 9-11.
பாடல் : இறைவன் சொல்வது சமாதானமே

(அல்லது) திருப்பாடல்கள் 85
நற்செய்தி : யோவா 1 : 6-8, 19-29.

3 ஆம் வாரம்
வாசகம் : 1 தெசலோனிக்கர் 5 : 16-24
திருவருகைக் காலம்
பாடல் : மகிழ்வோம் மகிழ்வோம் (அல்லது) திபா 43
நற்செய்தி : லூக்கா 3:7-18.

4 ஆம் வாரம்
பாடல் : இயேசு கிறிஸ்து வருகின்றார்,
வாசகம் : எசாயா 45:6-8.
உன்னைத் தேடி வருகின்றார். (அல்லது) திபா
நற்செய்தி : லூக்கா 6:27-35.

**தந்தையாகிய இறைவனும்,**

**நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும்,**

**வழிநடத்துபவராகிய தூய ஆவியும்**

**அளிக்கின்ற அன்பும் இரக்கமும் சமாதானமும்**

**நம் அனைவரோடும் இருப்பதாக.**



**வேதியர் கையேடு அர்ப்பண பூக்கள் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.**

**அன்பின்மடல்**